# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1983, நவம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, திசெம்பர் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 60*

## 1983 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1983, நவம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 59/82
1558

**"பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர்" என்ற பதவியை ஒழித்தலினதும், பணிப்பாளரின் பணிகள் செயலாளரினால் நிறைவேற்றப்படுவதனதும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகளைச் செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டமானது 1983 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

எழுத்திலான வேறு சட்டங்களைத் திருத்துதல்.

2. நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக, எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது அத்தகைய எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட, செய்யப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், அனுமதிப்பத்திரத்தில், செய்தித் தொடர்பில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர்" என்ற சொல்லமைப்பு இடம்பெறும் இடங்களிலெல்லாம் அச்சொல்லமைப்புக்குப் பதிலாக "பண்பாட்டு அலுவல்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதியாளர்" என்ற சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் "பணிப்பாளர்" என்ற சுருக்கக் குறியீடு பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளரைக் குறித்துக்காட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றபோதிலெல்லாம் அத்தகைய சுருக்கக் குறியீடு அத்தகைய செயலாளர் அல்லது அவரது பிரதிநிதியாளர் பற்றிய குறிப்பீடொன்று என்றுாற்போன்று வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள், முதலியவற்றைப் பேணல்.

3. நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளரால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது எழுதி நிறைவேற்றப்பட்ட எத்தகையதுமான ஒப்பந்தம், உடன்படிக்கை, அல்லது வேறு சாதனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றும், அத்தேதியன்றும் அதன்பின்னரும் பண்பாட்டு அலுவல்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளரால் அல்லது செயலாளர் சார்பில் செய்யப்பட்டதாகவும், வழங்கப்பட்டதாகவும் அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டதாகவும் அல்லது செய்யப்பட்டிருப்பதாகவும், வழங்கப்பட்டிருப்பதாகவும் அல்லது நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

எ 72547—2,850 (10/83)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.